# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2510/14 - 2026 ඔක්තෝබර් මස 12 වැනි සඳුදා - 2026.10.12

2510/14 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**ச.வ.பி. 7/2001 (VI)**

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**எச்.எம். விஜித ஹேரத்**
வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும்
சுற்றுலாத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2026, ஒற்றோபர் 09.

**ஒழுங்குவிதிகள்**

2012 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந்தேதிய 1758/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) ஒழுங்குவிதி 5 இல் –

(அ) அவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(1) பெயர்குறிக்கப்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆளொருவரினால், குழுவினால் அல்லது உருவகத்தினால் அல்லது அத்தகைய பெயர்குறிக்கப்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆளுக்காகவும், குழுவுக்காகவும் அல்லது

உருவகத்துக்காகவும், அவைசார்பிலும் அல்லது அவற்றின் பணிப்பின்பேரில் வேறெவரேனும் ஆளுக்கு, வேறேதேனும் குழுவுக்கு அல்லது உருவகத்துக்கு உரித்தான அல்லது அவற்றினால் முழுமையாக அல்லது கூட்டாக சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட எவையேனும் நிதிகளை, வேறெவையேனும் நிதிசார் சொத்துக்களை அல்லது பொருளாதார வளங்களை ஆளெவரும் கையாளுதலாகாது. அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆள், குழு அல்லது உருவகம் பெயர்குறிக்கப்பட்டிருக்கும் காலம்வரை அத்தகைய நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் முடக்கப்பட்டனவாக இருத்தல் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், எவரேனுமாள் ஒரு முடக்கப்பட்ட கணக்கின்மீது வருமதியாகவுள்ள வட்டியை அல்லது வேறு ஈட்டுகைகளை அல்லது அக்கணக்கு முடக்கப்பட்டதாக வருமுன்னர் அல்லது மூன்றாம் திறத்தவரொருவரினால் அக்கணக்குக்கு வேறு நிதிகள் கைமாற்றப்படமுன்னர் செய்துமுடிக்கப்பட்ட அல்லது எழுந்த ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகளின்கீழ் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளை, வரவுவைக்கப்பட்ட நிதிகளும் முடக்கப்பட்டனவாக இருக்கும் காலம்வரை, அம்முடக்கப்பட்ட கணக்குக்கு வரவுவைக்கலாம்.";

(ஆ) அவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"ஆளெவரும், பெயர்குறிப்புக்கு முன்னரான எக்கட்டத்திலும், அதன்மூலம் அவ்வாளின், குழுவின் அல்லது உருவகத்தின் நிதிகளுக்கான, வேறு நிதிசார் சொத்துக்களுக்கான மற்றும் பொருளாதார வளங்கலுக்கான அணுகுகை அதன்மேல் தடைசெய்யப்படக்கூடிய வகையில் அத்தகை நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் முடக்கப்படலாமென அத்தகைய ஆளுக்கு, குழுவுக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தலாகாது அல்லது அறிவித்தல் கொடுக்கப்படுவதனை அனுமதித்தலாகாது அல்லது செய்வித்தலாகாது:

ஆயின் எவ்வாறாயினும், தகுதிவாய்ந்த அதிகாரியானவர் அத்தகைய நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார வளங்கள் முடக்கப்பட்டுள்ள பின்னர் அத்தகைய ஆளுக்கு, குழுவுக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தலொன்று கொடுக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.";

(இ) அவ்வொழுங்குவிதியின் (3) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(3அ)(அ) இவ்வொழுங்குவிதிகளின் கீழான கடப்பாடொன்றைப் பின்பற்றி, (1) அம் பந்தியின்கீழ் முடக்குதலொன்றுக்கு அமைந்தனவாகவுள்ள நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார வளங்களை வைத்திருக்கின்ற எவரேனுமாள், எந்த ஆளின் நிதிகள், வேறு நிதிசார் சொத்துக்கள் அல்லது பொருளாதார வளங்கள் முடக்கப்பட்டுள்ளனவோ அந்த ஆளுக்கு அத்தகைய முடக்குதல் பற்றிய அறிவிப்பொன்றையும், முடக்குதலை அகற்றுவதனை நாடுவதற்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள நடவடிக்கை முறைகளையும் வழங்குவதற்கு முடக்குதலானது பயனுறுத்தப்பட்ட பின்னர் நியாயமான எல்லா முயற்சிகளையும் எடுத்தல் வேண்டும்.

(ஆ) நிதிகளை வைத்திருக்கின்ற ஆள் நிதிசார் உளவறிதற் கூறுக்கும் உடனடியான அறிவிப்பை வழங்குதல் வேண்டும். நிதிசார் உளவறிதற் கூறு அத்தகைய நிகழ்வுபற்றி தகுதிவாய்ந்த அதிகாரிக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

(இ) உட்பந்தி (அ) வின்கீழான அறிவிப்பு அத்தகைய முடக்குதலிலிருந்து இரண்டு வாரங்களினுள் பாதிக்கப்பட்ட ஆளின் சட்டரீதியான வாழிடத்துக்கு செய்யப்படுதல் வேண்டும்.

(ஈ) முடக்குதலினால் பாதிக்கப்பட்ட ஆள் இலங்கைக்கு வெளியே வாழ்ந்தால் முடக்குதல் பற்றிய அறிவிப்பானது சேர்ப்பிப்புச் செய்யப்படுதல் வேண்டும் என்றவொரு கோரிக்கையுடன், பாதிக்கப்பட்ட ஆள் எந்த நாட்டில் வாழ்கின்றாரோ அந்த ஆளினது நாட்டின் அரசாங்கத்துக்கு தகுதிவாய்ந்த அதிகாரிக்கான கோரிக்கையொன்றினூடாக வழங்கப்படுதல் வேண்டும்.";

(ஈ) அவ்வொழுங்குவிதியின் (4) ஆம் பந்தியில், "முடக்குதற் கட்டளையொன்றின் பயன்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "முடக்குதலின் பயன்" எனும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) ஒழுங்குவிதி 6 இல், அவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில், "முடக்குதற் கட்டளையொன்றுக்கு அமைந்தனவாகவுள்ள" எனும் சொற்களுக்குப் பதிலாக, "முடக்குதலொன்றுக்கு அமைந்தனவாகவுள்ள" எனும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) ஒழுங்குவிதி 8 இல், அவ்வொழுங்குவிதியின் (4) ஆம் பந்தியில், "முடக்குதற் கட்டளையினால்" எனும் சொற்களுக்குப் பதிலாக, "முடக்குதலினால்" எனும் சொல்லை இடுவதன் மூலமும்;

(4) ஒழுங்குவிதி 9 இல் –

(அ) அவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஆ) எனும் உட்பந்தியின் விடயம் (i) இல், "நிதிகளின் நிலைமை, முடக்குதல் நடவடிக்கைகள் மற்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிதிகளின் நிலைமை, முடக்குதல் மற்றும் " எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3)(அ) பெயர்குறிக்கப்பட்ட ஓர் ஆளின் உருவகத்தின் சார்பில் அல்லது அவரது அல்லது அதனது பணிப்பின்பேரில் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றது, கட்டுப்படுத்தப்படுகின்றது அல்லது வைத்திருக்கப்படுகின்றது அல்லது சொந்தமாக வைத்திருக்கப்படக்கூடியது, கட்டுப்படுத்தப்படக்கூடியது அல்லது வைத்திருக்கப்படக்கூடியது என அவர் அல்லது அவள் சந்தேகிக்கின்ற சொத்தொன்றை வைத்திருக்கும் ஆளொருவர், அச்சந்தேகத்தைச் சரிபார்ப்பதற்கு நிதிசார் உளவறிதற் கூறுக்கான பிரதியொன்றுடன் சேர்த்து தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் எழுத்தில் கோரிக்கையொன்றை விடுவிக்கலாம்.

(ஆ) அக்கோரிக்கையை விடுவிக்கின்ற ஆள் அறிந்துள்ளவாறு சொத்தினதும் மற்றும் அச்சொத்தின் சொந்தக்காரரினதும் அல்லது கட்டுப்பாட்டாளரினதும் விபரங்களுடன் அக்கோரிக்கை சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) தகுதிவாய்ந்த அதிகாரி, பந்தி (அ) வின்கீழான கோரிக்கையொன்றை விடுத்துள்ள ஆளொருவருக்கு உதவுவதற்கென அவரது மிகச்சிறந்த முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஈ) பந்தி (அ) வின்கீழான கோரிக்கையொன்றைப் பெற்றபின்னர் நியாயமான முறையில் செயல்முறைக்குகந்தவாறு விரைவாக தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது நிதிசார் உளவறிதற் கூறு, பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு, எழுத்தில் பதிலிறுத்தல் வேண்டும்:-

(i) ஆதனமானது ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்ற அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற சாத்தியமுள்ளது;

(ii) ஆதனமானது ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்ற அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற சாத்தியமில்லை; அல்லது

(iii) ஆதனமானது ஒரு பெயர்குறிக்கப்பட்ட ஆளினால் அல்லது உருவகத்தினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்ற அல்லது கட்டுப்படுத்தப்படுகின்ற சாத்தியமுள்ளதா என்று அறியப்படவில்லை.";

(5) ஒழுங்குவிதி 11 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும் :-

"11. (1) ஐந்தாம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின், 5 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (அ) எனும் உட்பந்தியின் அல்லது 5 ஆம் ஒழுங்குவிதியின் (4) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிகான மறியற்றண்டணைக்கு அல்லது நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) நான்காம் ஒழுங்குவிதியின் (8) ஆம் பந்தியின், 5 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (ஆ) எனும் உட்பந்தியின் அல்லது 5 ஆம் ஒழுங்குவிதியின் (3) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிகான மறியற்றண்டணைக்கு குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) ஐந்தாம் ஒழுங்குவிதியின் (3அ) எனும் பந்தியில் அல்லது 9 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் (ஆ) எனும் உட்பந்தியில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத்தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.";

(6) ஒழுங்குவிதி 13 இல் –

(அ) "ஒரு சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைக் கட்டுப்படுத்துதல்" எனும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும் :-

""உருவகம்" என்பது, ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குழுமத்தை, குழுவை, கழகத்தை, ஒழுங்கமைப்பை, நிறுவனத்தை அல்லது ஒழுங்கேற்பாட்டை உள்ளடக்குகின்றது;";

(ஆ) "ஒரு சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைச் சொந்தமாக வைத்திருத்தல்" எனும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:-

""ஆள்" என்பது, சட்ட ஆளுமையைக் கொண்டிருந்தாலுஞ்சரி அல்லது அல்லாவிடினுஞ்சரி எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளை உள்ளடக்குகின்றது என்பதுடன் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அத்தகைய சட்ட ஆளின் கிளையொன்றை உள்ளடக்குதலும் வேண்டும்;".

EOG 10 - 0166/1

---

**ச.வ.பி. 7/2001(VI)**

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**எச்.எம். விஜித ஹேரத்,**
வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும்
சுற்றுலாத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2026, ஒற்றோபர் 09.

**ஒழுங்குவிதிகள்**

2012 ஆம் ஆண்டு மே 31 ஆந்தேதிய 1760/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2012 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) இரண்டாம் ஒழுங்குவிதியில், "ஆப்கான் குழுவுக்கெதிராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆப்கான் குழுவுக்கெதிராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) ஒன்பதாம் ஒழுங்குவிதியில், அவ்வொழுங்குவிதியின் (10) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:-

"(1) தகுதிவாய்ந்த அதிகாரி, அவ்வாறு செய்வதற்கான தமது உட்கருத்துப் பற்றித் தடைசெய் குழுவுக்கு அறிவிப்பு வழங்கிய பின்னரும் தடை செய் குழுவின் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகிய பின்னரும் ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்புப் பேரவையின் தீர்மானம் 1452 இல் தரப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளுக்கிணங்க, குறித்த வகையான கட்டணங்கள், செலவீனங்களும் சேவைக் கட்டணங்கள் அல்லது அதிவிசேட செலவுகளுக்கான கொடுப்பனவு உட்பட அடிப்படை செலவுகளுக்கான அவசியமானவாறாக, குறிப்பிட்ட நிதிகள் விடுவிக்கப்படக்கூடியவகையில் அல்லது சொத்துக்கள் கிடைக்கக் கூடியனவாக்கப்படக் கூடியவகையில் 5 ஆம் அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியிலுள்ள தடையொன்றை நீக்குவதற்குக் குறிப்பிட்ட அதிகாரவளிப்பொன்றை வழங்கலாமென்பதுடன், அவ்வதிகாரவளிப்புத் தொடர்பில் தோதான நிபந்தனைகள் பற்றியும் முடிபு செய்யலாம்.";

(3) பன்னிரெண்டாம் ஒழுங்குவிதியில், அவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்னர் பின்வரும் பந்தியை சேர்ப்பதன் மூலமும்:-

"(3) (அ) எவ்வாளொருவர் சொத்தொன்றை வைத்திருக்கின்றாரோ மற்றும் அத்தகைய சொத்து பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவர் அல்லது உருவகமொன்றின் சார்பில், அல்லது பணிப்பில் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதென

அல்லது சொந்தமாக வைத்திருக்கப்படலாமென, கருதப்படுகின்றதென அல்லது கட்டுப்படுத்தப்படலாமென அல்லது வைத்திருக்கப்படலாமென சந்தேகிக்கின்றாரோ அவ்வாள் சந்தேகத்தினை தெளிவுபடுத்துவதற்கு, நிதிசார் உளவறிதற் கூற்றுக்கு பிரதியொன்றுடன் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்தில் கோரிக்கையொன்றைச் செய்யலாம்.

(ஆ) கோரிக்கையானது கோரிக்கையைச் செய்கின்ற ஆளினால் அறியப்பட்டவாறாக சொத்தினதும் சொத்தை சொந்தமாக வைத்திருக்கின்றவரினதும் அல்லது கட்டுப்பாட்டாளரினதும் விபரங்களுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(இ) தகுதிவாய்ந்த அதிகாரி, எவ்வாளொருவர் (அ) பந்தியின் கீழ் கோரிக்கையொன்றைச் செய்திருக்கின்றாரோ அவ்வாளொருவருக்கு உதவுவதற்கு அவர்களின் சிறப்பான முயற்சிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

(ஈ) பந்தி (அ) இன்கீழான கோரிக்கையொன்றை பெறுகின்றதன் பின்னர் நியாயமான நடைமுறைசாத்தியமான விரைவில், தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது நிதிசார் உளவறிதற் கூறு பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு எழுத்தில் பதிலளித்தல் வேண்டும் –

(i) ஆதனம் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகமொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கட்டுப்படுத்தப்படக்கூடிய சாத்தியம் உள்ளது;

(ii) ஆதனம் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவமொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படக்கூடிய அல்லது கட்டுப்படுத்தப்படக்கூடிய சாத்தியம் இல்லை; அல்லது

(iii) ஆதனம் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரினால் அல்லது உருவகமொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படுகின்றதாயினுஞ்சரி அல்லது கட்டுப்படுகின்றாதாயினுஞ்சரி அது அறியாதவொன்றாக இருத்தல்.";

(4) பதினைந்தாம் ஒழுங்குவிதியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஒழுங்குவிதியை இடுவதன் மூலமும்:-

"15. (1) ஐந்தாம் அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) பன்னிரெண்டாம் அல்லது 13 ஆம் ஒழுங்குவிதியில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது இருபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) பதினான்காம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்ஞாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனை மற்றும் குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.".

(5) பதினேழாம் ஒழுங்குவிதியில் –

(அ) "உருவகம்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

""உருவகம்" என்பது, ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத குமு, குழு, கழகம், ஒழுங்கமைப்பு நிறுவனம் அல்லது ஒழுங்கேற்பாடு என்பவற்றை உள்ளடக்குகின்றது;"; அத்துடன்

(ஆ) "ஆள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

""ஆள்" என்பது, ஆளுமையையுடையதாயினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளை உள்ளடக்குகின்றது என்பதுடன் இலங்கையினுள் அல்லது இலக்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அத்தகைய சட்ட ஆளின் கிளையொன்றையும் உள்ளடக்குதலும் வேண்டும்;".

**ச.வ.-பி 7/2001(VI)**

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**எச்.எம். விஜித ஹேரத்**
வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும்
சுற்றுலாத்துறை அமைச்சர்.

கொழும்பு,
2026, ஒற்றோபர் 09.

**ஒழுங்குவிதிகள்**

2017 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் 6 ஆந் தேதிய 2039/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபை (சனநாயகக் கொரிய மக்கள் குடியரசு தொடர்பான தடைவிதிப்புகள்) பற்றிய ஒழுங்குவிதிகள், இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றன:-

(1) 2 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய ஒழுங்குவிதியை உட்புகுத்துவதுன் மூலமும்:-

"(2)(அ) இவ்வொழுங்குவிதிகளின் குறிக்கோளானது சர்வதேசச் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைகின்ற அணு, இரசாயன மற்றும் உயிரியல் ஆயுதங்களின் பரம்புதலும் அவை வெளிச்செலுத்தப்படும் வழிவகைகள் தொடர்பாகவும் தடைவிதிப்புக்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்திற்கு இயலச் செய்வதும், ஐக்கிய நாடுகள் சபைப் பாதுகாப்புப் பேரவையின் தீர்மானம் 1718(2006) மற்றும் சனநாயகக் கொரிய மக்கள் குடியரசு தொடர்பிலான எவையேனும் அடுத்துப்பின்னரான தீர்மானங்களுக்கு பயன்கொடுத்தலாகும்.";

(2) 19 ஆம் ஒழுங்குவிதியில், அவ் ஒழுங்குவிதியின் (4) ஆம் பந்தியில் "பெயர் குறிக்கப்பட்ட இனங்களினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பெயர்குறிக்கப்பட்ட ஆட்களினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(3) 28 ஆம் ஒழுங்குவிதியில் அவ்வொழுங்குவிதியின் (2) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:-

"(3) (அ) பெயர் குறிக்கப்பட்ட ஆளின் அல்லது உருவகத்தின் சார்பில் அல்லது பணிப்பின் பேரில் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதாகவோ, கட்டுப்படுத்தப்பட்டதாகவோ அல்லது வைத்திருக்கப்பட்டதாகவோ அல்லது சொந்தமாக வைத்திருக்கப்படக்கூடிய, கட்டுப்படுத்தப்படக்கூடிய அல்லது வைத்திருக்கப்படக்கூடிய அவர் சந்தேகிக்கும் சொத்தொன்றை வைத்திருக்கும் ஆளொருவர் அச்சந்தேகத்தை உறுதிப்படுத்த, நிதிசார் உளவறிதற் கூறுக்கு பிரதியொன்றுடன் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்திலான கோரிக்கையொன்றைச் செய்யலாம்.

(ஆ கோரிக்கையை செய்கின்ற ஆள் அறிந்தவாறான சொத்து மற்றும் சொத்தின் சொந்தக்காரர் அல்லது கட்டுப்பாட்டாளர் பற்றிய விடயங்கள் கோரிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(இ) தகுதிவாய்ந்த அதிகாரி, (அ) என்னும் பந்தியின் கீழ் கோரிக்கையொன்றைச் செய்துள்ள ஆளுக்கு உதவுவதற்கு அவர்களது சிறந்த முயற்சிகளைப் பயன்படுத்தல் வேண்டும்.

(ஈ) தகுதி வாய்ந்த அதிகாரி அல்லது நிதிசார் உளவறிதற் கூறு, (அ) என்னும் பந்தியின் கீழ் கோரிக்கையொன்று கிடைக்கப்பெற்றதன் பின்னர் இயன்றளவு விரைவாக நியாயமானதும் நடைமுறைக்கேற்பவும் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு எழுத்தில் பதிலளித்தல் வேண்டும் –

(i) அவ்வாதனம், பெயர்குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகமொன்றால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதாக அல்லது கட்டுப்படுத்தப்பட்டதாகவிருக்கச் சாத்தியமுள்ளது;

(ii) அவ்வாதனம், பெயர் குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகமொன்றால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதாக அல்லது கட்டுப்படுத்தப்பட்டதாகவிருக்கச் சாத்தியமற்றது; அல்லது

(iii) அவ்வாதனம், பெயர் குறிக்கப்பட்ட ஆள் அல்லது உருவகமொன்றால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதாக அல்லது கட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பது அறியப்படாதது.”; அத்துடன்

(4) 37 ஆம் ஒழுங்குவிதியில் "ஆள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

"ஆள்" என்பது சட்ட ஆளுமை கொண்டிருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி ஏதேனும் இயற்கை அல்லது சட்ட ஆளை உள்ளடக்குகின்றது; அத்துடன் இலங்கையினுள்ளே அல்லது வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட அத்தகைய சட்ட ஆளின் கிளையையும் உள்ளடக்குதல் வேண்டும்;"

EOG 10 - 0166/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.